திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் செயல்பட காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதிலேயிருந்து வரும் துர்நாற்றம் சுகாதாரக் கேடாக இருப்பதால், துர்நாற்றத்தை முதலில் அகற்றுவதற்கு ஆன முயற்சிகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றி விளக்கம் பெறத்தான் ஆய்வுக் குழு ஒன்று அமைப்பதும், பரிசீலனை செய்வதும், மத்திய சர்க்கார் அனுமதி பெற்றவுடன் மேற்கொண்டு வேலைகள் செய்யலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த பக்கிங்காம் கால்வாய் திட்டத்திற்காக மத்திய சர்க்காரிடம் பல ஆண்டுகளாக நாம் வேண்டிக் கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலமாகிய மைசூர் மாநிலத்தில் மத்திய சர்க்காருடைய ஒப்புதலேயில்லாமல், ஒரு அணைக்கட்டையே கட்டும்போது, நாம் மத்திய சர்க்காரின் ஒப்புதலை எதிர்பாராமலோ அல்லது ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோ, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 1958-லேயே கேட்கப்பட்டது. ரூ. 470 இலட்சம் செலவில் திட்டம் இருந்தது. புள்ளி விவரங்கள் படி இப்பொழுது எவ்வளவு ஆகுமோ, இது நிதி பற்றிய பிரச்சினை. அதிகாரம் பற்றியது அல்ல. மத்திய சர்க்காரிடமிருந்து நாம் நிதி பெற வேண்டியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இது ஒரு முக்கியமான திட்டம். விலைகள் கூட இதனால் குறைகிறது. ஆகவே இதை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சி செய்யப்படுமா? அந்த வகையில் காலதாமதம் தவிர்க்கப்படுமா? அவர்களிடமிருந்து பதில் வரவில்லை என்றால், வற்புறுத்தி பதிலைப் பெறுகின்ற வழியைத் தேடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல கட்டங்களில் பல விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய சர்க்காரின் நல்ல எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு செய்ய நம் அரசு வற்புறுத்தி வருகிறது. இப்பொழுது நம் அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

State Civil List

* **46** *Q.*—THIRU A. SWAMIDHAS :
THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the last Civil List for the State was published ; and

(*b*) the steps taken to publish a new list?

1971 ஜுன் 25]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியல் கடைசியாக 1969-இல் வெளியிடப்பட்டது.

(இ) 1—4—1970 வரைக்கும் திருத்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியலும், 1—1—1968 வரைக்கும் திருத்தப்பட்ட ஆண்டு நாட்டியல் பட்டியலும் (Civil list) தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, கெஜடெட் பதவி களுக்கு உயர்வு அளிக்கும்போது சீனியாரிடிபடியே கொடுக்கப் படுகிறதா? தகுதி திறமை என்று வைத்துக் கொண்டு அளிக்கப் படுகிறதா? தகுதி திறமை என்றால் அதிலே பல ஊழல்கள் நடை பெறக் காரணமாக இருப்பதால், சீனியாரிடியையே கணக்கில் வைத்துக் கொண்டு உயர்வு கொடுக்கப் படும் என்று முடிவு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சிவில் லிஸ்ட் எப்பொழுது வெளியிடப்பட்டது என்பது பிரதானக் கேள்வி. லிஸ்ட் அச்சு செய்வதில் இது போன்ற விஷயங்கள் பார்க்கப் படுவதில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அச்சடிக்கப்பட்ட சிவில் லிஸ்ட் அங்கத்தினர்களுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைச் செய்யலாமா என்று யோசிக்க வேண்டும்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, சம்பளத்தில் மட்டும் வேறுபாடு வைத்துக் கொண்டு, எல்லா வேலைகளும் அரசிதழ் பதிவு பெற்ற வேலைகளாகக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுவும் யோசிக்க வேண்டிய விஷயங்களில் ஒன்று.

திரு. எம். சுரேந்திரன்: சார், கெஜடெட் பதவியாளர்கள், அல்லாதவர்கள் என்று இரு பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டது வெகு காலத்திற்கு முன்னால். இப்பொழுது இருக்கும் நிலையில் அவரவர்கள் கடமைகளை உணர்ந்து காரியம் செய்து விடுவது நல்ல தல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் க்ளாஸிபிகேஷன், முறையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். யோசிக் கலாம் என்று ஏற்கனவே சொன்னேன்.

Police Mobile Laboratory in City

* 47 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Police Mobile Laboratory has been set up in Madras City; and

(b) if so, the details thereof?